# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

********

**முறையீட்டு மனு எண். 040/2016**
**ஆணை நாள். 07 -12-2018**

திரு. லாலு. டி. பன்சாலி,
**Mahavir Plantation (P)Ltd,**
**Prospect Estate,**
நடுவட்டம் அஞ்சல்,
நீலகிரி மாவட்டம் - **643 224.** --- **முறையீட்டு மனுதாரர்.**

செயல் அலுவலர்,
நடுவட்டம் பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம். ----- **எதிர் மனுதாரர்.**

**ஆணை**

நீலகிரி மாவட்டம், நடுவட்டம் பேரூராட்சியில் உள்ள மகாவீர் பிளாண்டேஷன் நிறுவனத்தினை சார்ந்தவரான, திரு லாலு. டி. பன்சாலி என்பவரது, 20.01.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.01.2016 வரப்பெற்று, முறையீட்டு மனு எண் 40/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

மேற்படி முறையீட்டு மனுவில் மனுதாரர் கீழ்கண்டுள்ளவாறான கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

1. நடுவட்டம் பேரூராட்சியின் 2015-16ம் ஆண்டுக்கான சொத்து வரி ரூ.25,79,562/-க்கான கேட்பு ஆணை கடித ந.க.எண்.203/2008, நாள் 30.11.2015, மாண்பமை உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் இறுதி ஆணை பிறப்பிக்கும் வரை நிறுத்தி வைக்கக் கோருதல்.
2. மேற்படி தொழிற்சாலை மற்றும் பிற கிளை நிறுவனங்களுக்கான மின்சார இணைப்புகளை பெறுவதற்கான தடையின்மை சான்றினை வழங்கிடுமாறு பேரூராட்சிக்கு ஆணையிடக் கோருதல்.
3. மேற்படி நிறுவன பிரதிநிதியுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டு கேட்பு நிர்ணயத் தொகையினை முடிவு செய்யக் கோருதல்

4. மேற்படி நிறுவனத்தின் இடங்களில் உள்ள அங்கீகாரமற்ற கதவு எண்களை ரத்து செய்திடவும், கட்டுமானங்களை அகற்றவும் பேரூராட்சிக்கு ஆணையிடக் கோருதல்.
5. மேற்படி நிறுவனத்திற்குட்பட்ட இரண்டு தேயிலை தோட்டங்களில் மேற்படி நிறுவனத்தின் அனுமதியின்றி எவ்வித பணிகளையும் மேற்கொள்ளக் கூடாதென பேரூராட்சிக்கு ஆணையிடக் கோருதல்.
6. மேற்படி நிறுவனத்திற்கு ஏற்பட்ட நிதியிழப்பினை வசூலிக்க உதவிடக் கோருதல்.
7. மேற்படி நிறுவனத்தின் செயல்பாடுகளையும் மதிப்பினையும் சேதப்படுத்தியமைக்கு பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோருதல்.

மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 40/2016 நாள் 12.02.2016 ன் மூலம் உரிய விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாராது, மஹாவீர் பிளாண்டேஷன் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற 10.12.2015 நாளிட்ட கடிதத்தில், நடுவட்டம் பேரூராட்சியினால் தங்களது நிறுவனத்திற்கான மின் இணைப்பினை திரும்பப் பெறுவதற்கான தடையின்மை சான்றினை வழங்காதது குறித்தும் சொத்து வரியினை 500 மடங்கிற்கும் மேலாக நிர்ணயிக்கப்பட்டதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கடிதத்தில் தங்களது மஹாவீர் பிளாண்டேஷன் நிறுவனத்திற்கு மின்சார இணைப்பு திரும்ப வழங்கிட பேரூராட்சியின் தடையின்மை சான்றினை தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதால், மேற்படி தடையின்மை சான்றினை வழங்கிட பேரூராட்சிக்கு ஆணையிடுமாறு கோரப்பட்டுள்ளது. மேலும் தங்களது நிறுவன பகுதியில் உள்ள கட்டிடங்களை, தங்களுடன் இணைந்து பேரூராட்சி நிர்வாகத்தினர் ஆய்வு செய்து, ஏற்கத் தக்க வகையில் சொத்து வரி கேட்பினை நிர்ணயித்திட வேண்டுமெனவும் மனுதாரால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலரது 21.03.02016 நாளிட்ட கடிதத்துடன் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான உரிய எதிர் வாதுரை வரப்பெற்றது. மேற்படி எதிர் வாதுரையில், மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் 1995–96 முதல் 2006–07முடிய உள்ள காலங்களுக்கு ரூ.58,48,888–30 என்ற அளவில் சொத்து வரி நிர்ணயிக்கப்பட்டது உண்மை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு நீதிப் பேராணை எண்.6257, 6258/1997ல் வழங்கப்பட்ட ஆணைகளுக்கிணங்க சட்ட முறைகளின்படி மேற்படி சொத்து வரி ரூ.18,52,789–40 என குறைத்து நிர்ணயிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொழிற்சாலை சீலிட்டது தொடர்பாக, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தினால் வழக்கு நீதிப்பேராணை எண்.17157/2010ல் விசாரிக்கப்பட்டு ஏற்கப்பட்டதுடன் 1995–96 முதல் 2006–07 வரையிலான காலத்திற்கான சொத்து வரி நிலுவை ரூ.18,52,789–40 மனுதாரால் செலுத்தப்பட வேண்டுமென ஏற்கப்பட்டு அதில் ரூ.5.00 லட்சம் தொகையினை நான்கு வாரங்களுக்குள் பேரூராட்சி நிர்வாகத்திற்கு செலுத்தி, நிறுவனம் சீலிடப்பட்டதை அகற்றவும் 03.11.2011 அன்று நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் 1995–96 முதல் 2006–07 வரையிலான காலத்திற்கான சொத்து வரி கேட்புத் தொகையினை 2013ல் தான் செலுத்தியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.மனுதாரர்2007–08 முதல் 2015–16 க்கான சொத்து வரியினை பல அறிவிப்புகள் வழங்கிய பின்னரும் செலுத்தத் தவறியுள்ளார் என செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 05.03.2015 நாளிட்ட அறிவிப்பின் மூலம் கேட்பு நிர்ணயம் செய்யப்பட்டமைக்கான விவரங்கள் மனுதாருக்கு

அளிக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி காலங்களுக்கான சொத்து வரி கேட்பு உரிய சட்ட விதிகளின்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதென உறுதி அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான கேட்பு நிர்ணயித்ததின்படி மனுதாரரால், பேரூராட்சிக்கு செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகை (ரூ..25,79,562/–) மிக அதிக அளவில் உள்ளதெனவும், மனுதாரர் மேற்படி நிலுவைத் தொகையினை செலுத்தாமல் காலம் கடத்தும் நோக்கத்துடன் இது போன்று வழக்குகளை/முறையீடுகளை தொடர்வதாகவும் செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் பேரூராட்சிக்கு செலுத்தப்படவேண்டிய அதிக அளவு நிலுவைத் தொகையினை சட்டப்படி செலுத்தாமல் தடையின்மை சான்றினை வழங்கிட கோருவது சட்டத்திற்கு புறம்பானதாகும் எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் சட்டக்கூறுகளின்படி மனுதாரர் கோரியவாறு தடையின்மை சான்றினை வழங்கிட இயலாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி, உள்ளாட்சி அமைப்புக்குட்பட்ட பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவது அவ்வுள்ளாட்சி அமைப்பின் தலையாய கடமையாகும் எனவும், அக்கடமையினை செயல்படுத்த உள்ளாட்சியின் வரம்பிற்குட்பட்ட நிறுவனங்களிடமிருந்து சட்டமுறைப்படி வரியினைங்களை வசூலிக்கவேண்டியது அவசியமானதாகும் என செயல் அலுவலர் தனது எதிர் வாதுரையில் குறிப்பிட்டுள்ளார். மனுதாரரது நிறுவனம் பெரிய அளவிலான இடப்பகுதியினையும் கட்டிட அமைப்புகளையும் கொண்டுள்ள நிலையில், உள்ளாட்சி அமைப்பிற்கான சொத்து வரியினை முறையாகவும், தாமதமின்றியும் செலுத்திட வேண்டியது அவசியமானதாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் பேரூராட்சிக்கு செலுத்தவேண்டிய பெரிய அளவிலான சொத்து வரி நிலுவைத் தொகை ரூ 25,79,562/– ஐ கடந்த எட்டு வருடங்களாக செலுத்தாமல் தாமதம் செய்து வருவதாக தெளிவுபட குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் சட்டக் கூறுகளின்படி பேரூராட்சி நிர்வாகத்தால் மனுதாரர் கோரிய தடையின்மை சான்றினை வழங்கிட இயலாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு நீதிப்பேராணை எண்.17157/2010ல் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற ஆணைகளின்படி, மனுதாரரால் செலுத்தப்படவேண்டிய 2006–07 வரையிலான சொத்து வரி நிலுவைத் தொகை ரூ 18,52,789–40 என ஏற்கப்பட்டு, அதில் ரூ.5,00,000/–ஐ மேற்படி நீதிமன்ற ஆணை பெறப்பட்ட நான்கு வாரங்களுக்குள் மனுதாரர் செலுத்தவேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ. 5,00,000/– பெறப்பட்டவுடன், மேற்கண்ட நிறுவனத்திற்கு பேரூராட்சியால் வைக்கப்பட்ட முத்திரை அகற்றப்படவேண்டுமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மீதமுள்ள நிலுவைத் தொகையினை மனுதாரர் மாதத் தவணையாக ரூ.1.00 லட்சம் வீதம், முதல் தவணையாக டிசம்பர் 2011 முதல் செலுத்தவேண்டுமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது, மேலும் மனுதாரர் எந்த ஒரு மாத தவணைத் தொகையினை செலுத்தத் தவறினாலும் மேற்படி நிறுவனத்தினை மீண்டும் சீலிடவும், முறைப்படியான நடவடிக்கைகள் மூலம் தொகையினை வசூலிக்கவும் பேரூராட்சிக்கு வழிவகை உள்ளதையும் தெளிவுபடுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

ஆவணங்களைப் பரிசீலித்ததில் 5, மற்றும் 6–01–2012 தேதிகளில் ரூ 7.00 லட்சம் மேற்படி நிறுவனத்தால் பேரூராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது. 22.01.2012ல் பேரூராட்சியால் மேற்படி நிறுவனத்திற்கு வைக்கப்பட்டுள்ள முத்திரை அகற்றப்பட்டுள்ளது. மேலும் 12.09.2013ல் மேற்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலுவைத் தொகை ரூ.18,52,789–40 முழுமையாக தவணை முறையில் செலுத்தப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

மேற்கண்ட நீதிமன்ற ஆணைகளின்படி முதற்கட்டமாக ரூ.5.00 லட்சம் மேற்படி நிறுவனத்தால் செலுத்தப்பட்டதாகவும், உடன் மேற்படி நிறுவனத்திற்கு வைக்கப்பட்டிருந்த முத்திரை அகற்றப்பட்டு விட்டதாக 02.01.2017 அன்று பெறப்பட்ட செயல் அலுவலரது கூடுதல் விளக்கங்கள் அடங்கிய எதிர் வாதுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரரது 15.06.2016 நாளிட்ட மனுவில் தங்களது கோரிக்கையினை பரிசீலித்து தங்களது தொழில் நிறுவனங்களுக்கான மின் இணைப்பினை மீளப்பெற்றிட ஏதுவாக தடையின்மை சான்றினை உடனடியாக வழங்கிட பேரூராட்சிக்கு உத்திரவிடவேண்டுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 40/2016,நாள் 06.07.2016ன்படி, 11.08.2016 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி உரிய விளக்கங்களை அளிக்குமாறு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

அதன்படி 11.08.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், எதிர் மனுதாரரான நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள எதிர் வாதுரை / விளக்கங்களை பெற்றுக் கொண்டு, அதன் மீதான தனது தரப்பிலான பதில் விளக்கங்களை ஒரு மாத காலத்திற்குள் தாக்கல் செய்வதாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதன் பின்னர், மனுதாரரது 10.09.2016 நாளிட்ட கடிதத்தில் கூடுதல் தகவல்களை சேகரிக்க வேண்டியுள்ளதால் தங்கள் தரப்பிலான விளக்கங்களை தாக்கல் செய்திட 09.10.2016 வரை அவகாசம் அளிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் தங்களது தேயிலை தொழிற்சாலை மின்சார இணைப்புகள் இல்லாததினால் பல ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இம்முறைமன்ற நடுவ 25.10.2016 நாளிட்ட அறிவிப்பாணையில் மனுதாரர் தரப்பிலான விளக்கங்களை மேலும் தாமதமின்றி இரண்டு வாரங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு ஆணையிடப்பட்டது. மனுதாரரது தரப்பிலான ஆட்சேபணைகள்/விளக்கங்கள் 10.11.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி கடிதத்தில் கீழ்கண்டுள்ளவாறான இனங்களை பிரதானமான கோரிக்கைகள்/ ஆட்சேபணைகளாக மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

1. சொத்து வரி நிலுவைத் தொகை முதலில் ரூ.58,48,888–30 என பேரூராட்சியால் நிர்ணயிக்கப்பட்டு, பின்னர் செயல் அலுவலரது கடித எண்.203/2007, நாள் 12.06.2007ன்படி கேட்பு குறைக்கப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகமாக நிர்ணயிக்கப்பட்டு பின்னர் குறைக்கப்பட்டமைக்கான காரணம் செயல் அலுவலருக்கு மட்டுமே தெரியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் உதவி இயக்குநர், உதகமண்டலம் அவர்களது கடித எண்.897/2009/அ/நாள் 26.08.2009ல் 500 மடங்கு அதிகமாக சொத்து வரி கேட்பு சட்டத்திற்கு புறம்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதிலிருந்து நடுவட்டம் பேரூராட்சி நிர்வாகம் முரண்பாடாகவும் தவறாகவும் செயல்பட்டு கேட்பு நிர்ணயித்துள்ளது தெளிவாகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. பேரூராட்சி நிர்வாகம் மின் இணைப்பு பெற தடையின்மை சான்று வழங்காததினால் தங்களது நிறுவனத்திற்கு தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டு வருவதாக மனுதாரரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரரது மேற்கண்ட 03.11.2016 நாளிட்ட விளக்கக் கடிதத்துடன் வரப்பெற்ற முறையீட்டு மனுவில், பேரூராட்சி நிர்வாகம் 06.02.2004ல் தங்களது தொழிற்சாலையினை மூடி

முத்திரையிட்டதாகவும், மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகை ரூ 18,52,78.40 முழுவதையும் பெற்றுக் கொண்ட பின்னரே முத்திரையினை அகற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி தொழிற்சாலை 22.01.2012 அன்று முத்திரை அகற்றப்பட்டதாகவும் அதே முறையீட்டில் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நீதி மன்றத்தின் முன்பு மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 19.09.2013 நாளிட்ட ஆவணத்தின்படி 12.09.2013ல் தான் மேற்படி நிலுவைத் தொகையின் கடைசித் தவணையாக ரூ 1,77,789–40 செலுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி நிறுவனத்தின் மீது இடப்பட்ட முத்திரை தாமதமாக அகற்றப்பட்டது என்ற மனுதாரரின் கோரிக்கை ஏற்புடையதல்ல.

இம்முறைமன்ற நடுவ 24.11.2016 நாளிட்ட அழைப்பாணையின்படி, 19.12.2016அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி 19.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரது மேற்படி 03.11.2016 நாளிட்ட ஆட்சேபணை கடிதத்தினை பெற்றுக் கொண்டு அதன் மீதான பதிலுரையினை வழங்கிட 15 நாட்கள் கால அவகாசம் வழங்கிடுமாறு கேட்டுக் கொண்டு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து செயல் அலுவலரது பதிலுரை 02.01.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி பதிலுரையில் நீதிமன்ற ஆணைகளுக்கிணங்க மனுதாரரால் முதற்கட்டமாக மொத்த சொத்து வரி நிலுவைத் தொகையில் ரூ 5.00 லட்சம் செலுத்தப்பட்டவுடன் மேற்படி நிறுவனத்திற்கு இடப்பட்டிருந்த முத்திரை அகற்றப்பட்டுவிட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட நிலுவைத் தொகை ரூ.18.52 லட்சம் என்பது உரிய சட்ட விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என பேரூராட்சி செயல் அலுவலரின் பதிலுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரால் 1995–96 முதல் 2006–07வரையிலான காலங்களுக்கான சொத்து வரி நிலுவைத் தொகையாக மேற்படி தொகை செலுத்தப்பட்டுள்ளது எனவும், 2008 முதல் 2015 வரையிலான பெரும் நிலுவைத் தொகை மனுதாரரால் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது எனவும் பேரூராட்சி செயல் அலுவலரின் பதிலுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அதிகப்படியான சொத்துவரி நிலுவைத் தொகையாக ரூ 25.79 லட்சம் (2007–08 முதல் 2015–16 வரை) செலுத்தப்படவேண்டியுள்ள மேற்படி நிறுவனத்திற்கு மின் இணைப்பு பெற பேரூராட்சி மூலம் தடையின்மை சான்று வழங்கிட சட்டப்படியான வழி வகை இல்லை என தனது பதிலுரையில் பேரூராட்சியின் செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், மனுதாரரது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளது போன்று சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் சொத்து வரியினை பல மடங்கு அதிகரித்து கேட்பு நிர்ணயம் செய்தது தொடர்பாகவும், பின்னர் அதனை பெருமளவில் குறைத்துள்ளது குறித்தும் சுய லாபம் அல்லது உள் நோக்கம் ஏதும் அடிப்படைக் காரணமாக உள்ளதா என்பது குறித்து விசாரிக்கவேண்டியது அவசியமென இம்முறைமன்ற நடுவத்தால் கருதப்பட்டு அவ்வாறே ஆணையிடப்பட்டது. அதன்படி இம்முறைமன்ற நடுவ 04.08.2017 நாளிட்ட அறிவிப்பாணையின் வாயிலாக மேற்படி நிறுவனத்திற்கு 1995–96 முதல் 2006–07 முடிய சொத்து வரியாக ரூ 58.48 லட்சம் விதித்தபின்னர், அதனை ரூ 18.52 லட்சமாக குறைத்து பேரூராட்சி செயல் அலுவலரது அறிவிப்பு ந.க.எண். 203/2007 நாள் 12.06.2007 ன்படி மறு சீராய்வு நிர்ணயம் செய்யப்பட்டது தொடர்பாக ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. மேலும் மேற்படி வரி விதிப்பு பொது சீராய்வின்போது அரசு

அனுமதித்துள்ள அளவினைக் காட்டிலும் 500 மடங்கு அதிகமாக சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளதாக உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநரது கடித எண் 897/2009 அ/நாள் 26.08.2009ல் தெரிவிக்கப்பட்டுள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டு உரிய விளக்கங்களை முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்குமாறும் செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலரது 18.08.2017 நாளிட்ட அறிக்கை வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் நடுவட்டம் பேரூராட்சியில் வரிசீராய்வு செய்து பத்து ஆண்டுகளுக்கு மேலானதால், அனேக கட்டிடங்கள் சீரான வரி விதிப்பிற்குட்படாமலும், பேரூராட்சியின் நிதி நிலைமை மிக பின்தங்கிய நிலையில் இருந்ததாலும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதகமண்டலம் அவர்களது குறிப்பாணை ந.க.எண். 46912/95/நாள் 11.07.1995 ன்படி கணிசமாக வரி உயர்வு செய்ய அறிவுறுத்தியதின் பேரில் வரிகள் உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாவீர் பிளாண்டேஷன் நிறுவன கட்டிடங்களுக்கு சொத்து வரி உயர்த்தப்பட்டது தொடர்பாக, அந்நிறுவனத்தால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புரையில் 1995–96 முதல் 2006–07 ஆண்டு வரையிலான சொத்து வரி கேட்பு பதிவேட்டின்படி, கேட்புத் தொகை ரூ.52,87,841/– என்பதை ரூ. 18,52,789/– என்று குறைக்கப்பட்டதை தொடர்ந்து மீதமுள்ள தொகை ரூ.34,35,052/– நடுவட்டம் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 66/2014 நாள் 25.08.2014ன்படி தள்ளுபடி செய்யப்பட்டு கேட்பிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் மூலம் தீர்ப்பளிக்கப்பட்டு ஏற்கப்பட்ட கேட்புத் தொகை ரூ. 18,52,789/– நீதிமன்ற ஆணைகளின்படி ஜனவரி 2012 முதல் செப்டம்பர் 2013 வரை தவணை முறையில் மேற்படி நிறுவனத்தால் பேரூராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி நிறுவனத்தாரால் 2007–08 ஆண்டு முதல் 2017–18 ஆண்டு வரை செலுத்தப்படவேண்டிய சொத்து வரி நிலுவைத் தொகை ரூ. 31,78,314/– நாளது வரை பேரூராட்சிக்கு செலுத்தப்படவில்லை என பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டள்ளது.

மேற்படி செயல் அலுவலரது அறிக்கையினை பரிசீலித்ததில் சொத்து வரி சீராய்வு செய்தது தொடர்பான அரசு உத்திரவு நகல் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருப்பினும், அவ்வாறான அரசாணை(அரசாணை எண்170 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை) நகல் ஏதும் இணைக்கப்படாதது கண்டறியப்பட்டது. எனவே மேற்படி அரசாணை நகலினை அனுப்பி வைத்திடுமாறு இம்முறைமன்ற நடுவ 07.09.2017 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது. மேலும் மனுதாரரது கோரிக்கையான ரூ.52.87 லட்சமென அதிகப்படியாக நிர்ணயிக்கப்பட்ட வரி கேட்பு எவ்வாறு ரூ 18.52 லட்சமென குறைக்கப்பட்டது என்ற கேள்வி குறித்து செயல் அலுவலரது அறிக்கையில் நீதிமன்ற தீர்ப்புரையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது குறித்தும் முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது. மாண்பமை நீதிமன்ற தீர்ப்புரையில் (நீதிப்பேராணை எண் 17157/2010) கீழ்கண்ட வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

"Admittedly the petitioner was in arrears of Property Tax for a sum of Rs.18,52,789-40 " என உள்ளது இதன்படி பேரூராட்சி நிர்வாகமே சொத்து வரி நிலுவை கேட்புத் தொகை ரூ 18,52,789–40 என ஒப்புக் கொண்டதாகவே தெரிகிறது. எனவே மேற்படி வழக்கில் பேரூராட்சி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உறுதி ஆவண நகலினையும் சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டது. மேற்படி ஆணைகளுக்கிணங்க பேரூராட்சி செயல் அலுவலரது 22.09.2017 நாளிட்ட அறிக்கை

04.10.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி அறிக்கையுடன் அரசாணை (நிலை) எண் 170/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை/நாள் 02.09.1998 மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதகமண்டலம் அவர்களின் குறிப்பாணை எண்.46912/1995/நாள் 11.07.1995 ஆகியவற்றின் நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டன. மேற்படி இரு ஆவணங்களும் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன. மேற்படி ஆவணங்களில் சொத்து வரி சீராய்வு செய்ய அறிவுறுத்தியுள்ளதும், குறிப்பாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் சுற்றறிக்கையில் மேற்படி சீராய்வின்படி வரி விதிப்பினை நியாயமான அளவில் உயர்த்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நடுவட்டம் பேரூராட்சியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 500 விழுக்காடு அளவிற்கு உயர்த்தி நிர்ணயம் செய்ய எந்தவிதமான அறிவுரையும் வழி காட்டுதல்களும் வழங்கப்படவில்லை. மேலும் மேற்படி வழக்கில் செயல் அலுவலரது எதிர் வாதுரையினை பரிசீலித்ததில் பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் (57/2007) மூலம் மேற்குறிப்பிட்டவாறான மறு சீராய்வு கேட்புத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக புலனாகிறது.

இந்நிலையில், மேற்படி பேரூராட்சி தீர்மான நகல் கோரி பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. மேற்படி தீர்மானத்தில் நடுவட்டம் பேரூராட்சிக்குட்பட்ட மகாவீர் பிளாண்டேஷன் நிறுவனத்திற்கு சொந்தமான தேயிலைத் தொழிற்சாலை மற்றும் அனைத்துக் கட்டிடங்களுக்கும் 1995–96 முதல் வீட்டு வரி மற்றும் சொத்து வரி நாளது வரை செலுத்தப்படாமல் உள்ளதாகவும், வழக்கு தொடரப்பட்டிருந்ததாகவும், 1995–96 முதல் மிகவும் அதிகப்படியாக விதிக்கப்பட்ட வரியினை சட்ட விதிகளுக்குட்பட்டு மறு சீராய்வு செய்து குறைப்பது குறித்து பேரூராட்சி மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது புலனாகிறது. மேலும் 18.05.2007 அன்று அங்கீகரிக்கப்பட்ட மேற்படி தீர்மானத்தில் சட்ட விதிகளின்படி மறு சீராய்வு செய்து வரியினை குறைத்து கொடுக்க மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட ஆவண ஆதாரங்களின்படி சட்ட விதிகளுக்கு முரணாக எவ்வித ஆதார ஆணைகளுமின்றி மேற்படி நிறுவனத்திற்கு சொத்து வரி மிக அதிக அளவில் அப்போதிருந்த பேரூராட்சி நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது உறுதியாகிறது. எனவே மேற்குறிப்பிட்டவாறு சொத்து வரியினை பல மடங்கு உயர்த்தி கேட்பு நிர்ணயித்தமைக்கு பொறுப்பான அலுவலர்களது விவரங்களடங்கிய அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 07.12.2017 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலரது 15.12.2017ம் நாளிட்ட அறிக்கையில் 1996–97 முதல் 2006–07 வரையிலான காலத்திற்கான மேற்படி நிறுவனத்தின் சொத்து வரி கேட்பினை 500 விழுக்காடு உயர்த்தி கேட்பு எழுப்பப்பட்ட போது பொறுப்பில் இருந்த செயல் அலுவலர் திரு.பி.எல். அண்ணாமலை என்றும், அவர் காலமாகிவிட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்குறிப்பிட்டவாறு தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் பரிசீலித்ததில் 1996–97 முதல் 2006–07 வரையிலான சொத்து வரி கேட்புத் தொகை பல மடங்கு உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதும், பின்னர் 2007ம் ஆண்டில் மேற்படி கேட்புத் தொகை பேரூராட்சி மன்ற ஒப்புதலின் படி குறைக்கப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டது. அவ்வாறு எவ்வித அடிப்படை அரசாணைகளும் நெறிமுறைகளும் பின்பற்றப்படாமல் பன்மடங்கு சொத்து வரி கேட்பினை உயர்த்தி நிர்ணயித்த வகையில் மேற்படி நடுவட்டம் பேரூராட்சி மன்றம் தன்னிச்சையாக செயல்பட்டுள்ளது தெரிகிறது. இருப்பினும் அன்றைய காலத்தில் பணிபுரிந்த சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் காலமாகிவிட்டதையும், நீதிப் பேராணை எண்.17157/2010ல் வழங்கப்பட்ட மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற 03.11.2011 நாளிட்ட ஆணையில் மேற்படி அதிகப்படியாக

நிர்ணயிக்கப்பட்டிருந்த கேட்புத் தொகை குறைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதையும் கருத்தில் கொள்ளப்பட்டது. மேலும், முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட நீதிமன்ற ஆணைகளின்படி, குறைக்கப்பட்ட சொத்து வரி கேட்புத் தொகையான ரூ.18,52,789/- ஐ மட்டுமே பேரூராட்சிக்கு செலுத்தியுள்ளார் என்பதையும் கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்ட அதிகப்படியாக நிர்ணயிக்கப்பட்ட சொத்து வரி கேட்பு குறித்து மேல்நடவடிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கைவிடப்படலாம் என கருதப்படுகிறது. இருப்பினும் உள்ளாட்சி நிதித் தணிக்கை உதவி இயக்குநரது கடித எண். 897/ நாள்.26.08.2009 ல் மேற்படி இனத்தில் விதிகளுக்கு முரணாக 500 மடங்கிற்கு மேல் சொத்து வரி கேட்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு இது போன்ற நிகழ்வுகள் இனி ஏற்படாவண்ணம் தக்க கண்டிப்பான அறிவுரைகளை அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும் வழங்கிடுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

முறையீட்டு மனுதாரரது பிரதான கோரிக்கையாக, அவர்களது நிறுவனத்திற்கான மின் இணைப்பினை திரும்ப பெறுவதற்கான தடையின்மை சான்றினை பேரூராட்சி நிர்வாகம் வழங்கிட உத்திரவிட வேண்டும் என்ற கோரிக்கை உள்ளது. செயல் அலுவலரது 18.08.2017 மற்றும் 22.09.2017 நாளிட்ட அறிக்கைகள் மற்றும் கேட்பு அறிவிப்பு ஆவணங்களில் மேற்கண்ட நீதிமன்ற தீர்ப்புகளுக்கு பின்னர் அதன்படி குறைத்து நிர்ணயிக்கப்பட்ட 1995-96 முதல் 2006-07 வரையிலான கேட்புத் தொகை நிலுவை ரூ.18,52,789/- எனவும் அத்தொகை முழுவதும் வசூலிக்கப்பட்டுவிட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர், 2007-08 முதல் 2017-18 வரையலான காலத்திற்கான கேட்பு நிலுவைத் தொகை ரூ.31,78,314/--எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது வரப்பெற்றுள்ள 14.06.2018 நாளிட்ட நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையில் 1995-96 முதல் 2006-2007 வரை இருந்த கேட்புத் தொகையே தணிக்கை அறிக்கையின்படி அதிகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதில் நிலுவைத் தொகையாக ரூ.4,99,049.60 உள்ளதெனவும், 2007-08 முதல் 2017-18 வரையிலான கேட்புத் தொகை நிலுவை ரூ.76,23,453.30 உள்ளதெனவும், மொத்த நிலுவைத் தொகை ரூ.81,22,502.90 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி இரு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கிடையே மிகுந்த வேறுபாடுகள் (ரூ.49,44,189/-) காணப்படுகிறது. எனவே கேட்புத் தொகை நிர்ணயிக்கப்பட்டதில் விதி முறைகள் முறையாக கடைபிடிக்கப்படாத நிலை நன்கு புலனாகிறது.

நடுவட்டம் பேரூராட்சி செயல் அலுவலரின் 12.11.2018 நாளிட்ட செயல் முடிறயில் மேற்படி இம்முறைமன்ற நடுவ ஆணைகளின் அடிப்படையில் மேற்படி நிறுவனத்திற்கு சொத்து வரி விதிப்பு தொடர்பாக, வரிவிதிப்பு வாரியாக உரிய ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கத் தெரிவித்து பேரூராட்சி பணியாளர்களுக்கு பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு உத்திரவும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கீழ்க்கண்டவாறான ஆணைகள் இவ்வினத்தில் பிறப்பிக்கப்படுகின்றன.

(i) மேற்படி இனத்தில் பேரூராட்சியின் ஆவணங்களை ஆய்வு மேற்கொண்டும், ஆண்டு வாரியாக விதிக்கப்பட்ட சொத்து வரி விதிப்பு, விதிமுறைகளின்படி விதிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்தும், இந்நிகழ்வில் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படாவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆணையிடப்படுகிறது. இதனைத் தொடர்ந்து கண்காணித்து சட்டபூர்வ தக்க நடவடிக்கைகளை உறுதி செய்திடவும்

இறுதி அறிக்கையினை சமர்ப்பிக்கவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நீலகிரி மண்டலம் அவர்களுக்குத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

(ii) மேலும் விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்படவேண்டிய வரி வருவாய் கேட்பு நிர்ணயிப்பில் தொடர்ந்து இது போன்ற முரண்பாடுகள் ஏற்பட்டமைக்கு பொறுப்பான செயல் அலுவலர்கள் மீது துறை வாரியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென பேரூராட்சிசகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக.

பெறுநர்

1.திரு. லாலு. டி. பன்சாலி,
Mahavir Plantation (P)Ltd,
Prospect Estate,
நடுவட்டம் அஞ்சல்,
நீலகிரி மாவட்டம் – 643 224.

Thiru Lalu.T.Bhansali
Silver Bright House.
Chyullickal Road,
Cochin,
Kerala – 682005.

2.பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்
சென்னை.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நீலகிரி மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நீலகிரி.

4.செயல் அலுவலர்,
நடுவட்டம் பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம்.